மூலம் மக்களை சிந்திக்க வைப்பதும் தான் உண்மையான இலக்கியம். அவ்வகையில் பிரபுவுக்கு இது ஓர் வெற்றிதான். திரு. பிரபுவின் சிறுகதையை வெளியிட்ட சஞ்சீவியின் துணிச்சலுக்கும், எழுதிய திரு பிரபுவுக்கும் எனது பாராட்டுக்கள், வாழ்த்துகள்.

அன்புடன்
T. சௌந்தர். KOLDING.

அன்பின் சஞ்சீவிக்கு!

உங்கள் இலக்கியப்பணிக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள். வெளிதேசத்தின் துருவக் குளிரின் மணத்திலும் சஞ்சீவியின் தமிழ் மணம் சிரஞ்சீவியாக வாழட்டும்.

நன்றி.

அன்பின் வாசகன்
கந்துக்குட்டி.

பத்திரிகையின் வளர்ச்சிக்கு விமர்சனங்கள் இன்றியமையாதவை. எனவே வாசகர்களாகிய உங்கள் கடிதங்களை மிகவும் ஆவலாக எதிர்பார்க்கின்றோம். இருந்தும் மலர் 11 பற்றிய உங்கள் கருத்துகள், விமர்சனங்கள் இம்மலரில் இடம் பெறவில்லை. மலர் 13ல் வெளியிடப்படும். என்பதனை அறியத்தருகின்றோம்.

- சஞ்சீவி -

www.tamilarangam.net



களாக டென்மார்க்கில் வாழ்ந்தவர்கள். நீரு டென்மார்க்கில் "பொலிற்றிக்கன்" பத்திரிகை நிருபராகவும், ஷம்மி கட்டிடக்கலைப் பாடசாலையில் இறுதியாண்டு மாணவியாகவும் இருந்த போது டென்மார்க்கைவிட்டு ஆறு மாதங்களுக்கு முன் நீருவின் திருமணவிடயமாக இலங்கைக்கு வந்திருக்கிறார்கள்.

நீருவைக் கண்டதும் ஷம்மிக்கு ஒரே ஆனந்தம் கூடவே ஆச்சரியம் காரணம் நீரு காரில் வந்து இறங்கியதும் அத்தோடு டென்மார்க்கில் இருந்த நீருவாக இருந்ததும். உடையில் முழங்காலுக்கு மேலே அணிந்த இறுக்கமான பாவாடையும் வெப்பமான அல்லது கோடை காலத்தில் அணியும் சிறிய மேலாடையும் அணிந்திருந்தாள்.

"என்னடி இது டெனிஷில் கதைப்பது, தமிழ் வராதோ" என்கிறாள் ஷம்மி. "வருமே" என்றவாறு ஷம்மியை அணைத்து கன்னத்தில் கன்னம் வைத்து முத்தமிடுகின்றாள் நீரு.

நீரு சுதந்திரம் + நாகரீகப் பிரியை. டென்மார்க்கை விட்டு வந்தாலும் இலங்கை நிருபராக பொலிற்றிக்கன் பத்திரிகையில் எழுதிக் கொண்டு தான் இருக்கின்றாள். "மக்கென்ஸ் றோட்" கொழும்பு - 4 இல் ஒரு அறை + இலியல் அறை கொண்ட வீடொன்றை வாடகைக்கு எடுத்து கார் போன்ற சகல வசதிகளுடனும் தனியாக வாழத் தொடங்கிவிட்டாள். ஷம்மியோ நீருவுக்கு எதிர்மாறு பெட்டிப் பாம்பு எனக் கூறுவார்களே அப்படிப் பட்டவள். "யாழ் வேம்படி வீதியில் தாய் தந்தையுடன் வாழ்கின்றாள்.

www.tamilarangam.net



எண்ணியதும் அவள் மனம் அமைதி கொண்டது. மிக்கேலை மறக்க முடியாமல் தவித்து எத்தனையோ நாட்கள் யோசித்து இறுதியில் அவனை இலங்கை வர வேண்டாம் எனவும், தன்னை மறக்கும் படியும் எழுதிவிட்டு வாங்கிய புது வீட்டை விற்று விட்டு தனக்கென ஒரு அறையை "டிக்மன்ஸ் றோட்டில் வாங்கி தனியாக வாழத் தொடங்கி விட்டாள்.

நீதி சொன்னவற்றை மௌனமாகக் கேட்ட ஷம்மி அழுகின்றாள். ஷம்மி ஏன் அழுகின்றாள் என நீதி எழுப்புகின்றாள்.

" ஷம்மி... நீ ஏன் அழுகின்றாய், அழ வேண்டிய நானே அமைதியாக இருக்கின்றேன். மிக்கேல் இங்கே வந்தால் எனக்கு மட்டுமல்லை இந்த நாட்டுக்கே ஆபத்து."


" இல்லடி நீதி, மிக்கேல் தான் நம்ம நாட்டுக்கு "எய்ட்ஸ்" கொண்டு வாரான் என்று இல்லை. நம்ம நாட்டுக்கு எப்பவே வந்தாச்சு. அதைவிட நம்ம நாட்டுக்காரர்கள் எத்தனையோ பேர் உள் நாட்டிலும் இன்றும் வெளிநாடுகளிலும் MARI HUANA HERION எனப் பாவித்துக் கொண்டிருக்கிறார்களே. அவர்கள் எண்ணத்தைபடி கொண்டு வருவாங்க எய்ட்ஸ் தான். காரணம் அவங்க உடம்பிலே எதிர்ப்புச்சக்தி குறைந்திடும் வேளையில் தகாத பெண்களுடன் உறவு கொள்வதாலும் ஊசி மூலம் ஒருவர் மாறி ஒருவர் போதை மருந்துக்களை ஏற்றுவதனாலும் தம்முடைய உடலை தாங்களே நாசம் பண்ணுகிறார்கள். உதாரணமா என்னையே எடுத்துக் கொள். என் உடம்பிலும் "எய்ட்ஸ்" கிருமிகள் வந்தாச்சு."

ஷம்மி... என்னடி சொல்கிறாய் எனக் கேட்டு.

www.tamilarangam.net



# உன்னையே நீ....



- பிரேம் -

"இந்த அப்பா" இவர் இப்ப சரியான ரொம்பவும் அதுவும் போக கவலைக்கிறார். நான் நினைக்கிறேன் பிறக்கிறது பல்லு முளைக்கப் போகுது என்று. இங்க முழு கூட நிறுப்பா நான் அப்பா இங்கே. இந்த அப்பா பிறக்கிறது முதல் பல்லு முளைக்க எல்லோருக்கும் சொல்லி பல்லுக் கொழுக்கட்டை அவிப்பம் என்னப்பா!

என்னப்பா பேசாமல் இருக்கிறியள். செலவு என்டு நெனைச்சு மாதிரி இருப்பியளோ..... அதுவும் இங்க வெளிநாட்டில அநாதை மாதிரி இருக்கிறவர்கள் இப்படி நல்ல நாள் பெருநாளிலாவது நாலு நல்ல சனத்தைக் கூப்பிட்டு சந்தோசமாக இருந்துக் கொண்டாடுவோம் என்றால் நீங்கள் இப்படி உம் என்டுகொண்டு இருக்கிறியள்.... ஏன் என்று நான் தெரியவில்லை!

என்னம்மா சாந்தி.... நீர் என்ன கதைக்கிறீர். என்று யோசித்துத் தானா கதைக்கிறீர்.... ஒரு பிள்ளை பிறந்தால் முப்பத்தொன்று, பல்லு முளைக்கும் போது,

www.tamilarangam.net



நல்லா இருக்கா?

சரி உமது கருத்துப்படி இனியாவது நன்மை செய்ய வேண்டும் என்று நினைத்துத்தான் இப்படி இவர்களுடன் சேர்கிறீர் என்கிறீர்! எத்தனையோ நன்மையான பல காரியங்களை நீர் உமது மதத்தில் இருந்து கொண்டே உமது மதத்திலேயே செய்து இருக்கலாமே?

நீர் எவ்வளவு இலகுவாக உமது மதத்தை விட்டு வேறு மதம் மாறினீர்? உம்மால் முடியுமானால் ஒரு வெள்ளைக்காரனை உமது மதத்திற்கு வரும்படி கேட்டுப் பாரும்? அதை அவர் ஏற்றுக் கொள்வாரா? நீர் இப்படி போனது எங்கள் இன முடிவுகளால் எல்லாத் தமிழர்களுமே கொள்கை இல்லாது வாழ்கின்றார்கள். அவர்களை எங்கே இழுப்பது இருக்கலாம் என்ற சிந்தனையை அவர்களுக்கு ஏற்படுத்துகின்றீர் இல்லையா?

வெள்ளைக்காரர்கள் தமது சொந்த மதத்தில் ஈடுபாடு உள்ளவரோ இல்லையோ எக்காரணம் கொண்டும் அந்த மதத்தைப் பற்றி ஏறெடுத்தும் பார்க்கமாட்டார்கள்.

மதம் என்பது மனிதனை நெறிப்படுத்தி நேர்வழிப்படுத்துவதற்கே தவிர நேர்வழியில் செல்பவனை இழுப்பதற்காக அல்ல! மதம் என்பது மனித நேயத்தை வளர்க்க வேண்டுமே தவிர இப்படி.....

என்ன அண்ணா போலீஸ்காரியை போல இருக்கு? இன்னும் தம்பி கேள, உம்மைப் போல நிறைந்த வயதில் இங்கு வந்து சுயமாக சிந்தித்து ஒரு திடமான முடிவை, நீர் மதத்தை எடுக்க முடியாது. அதிகமானோரும் எத்தனையோ இளைஞர்கள் செய்யும் தவறு தான் இது. வெளிநாடு போக வேண்டும் என்பதற்காக தொடங்கி பின்பு அங்கு இருந்த ஏக்காக அலைந்திடும் எத்தனையோ பேரை எனக்குத் தெரியும். அந்த நிலை உமக்கும்

www.tamilarangam.net



12. 18: குதிரைக்கு இந்தப் பெயரும் உண்டு.
20. 17: ஒரு செயற்பாட்டிற்கு மறு விளைவு ஏற்படும் போது அதை, இப்படிக் கூறுவர். இது குழம்பியுள்ளது.
20. 24: வெற்றிலை, பாக்கு, கோதக்கட்டி என்பவற்றோடு இந்தத் தேவையானவையும் சேரும் போது, இந்தப் பெயர் பெறுகிறது.
27. 30: M.G.R நடித்த வெற்றிப் படங்களில் ஒன்றின் பெயரும், பெரியோர்கள் தவறு செய்யும் சிறியோர்க்கு இப்படியும் புத்திமதி சொல்வர்.
36. 35: கூடுதலாக எல்லா வீடுகளிலும் இது உள்ளது. ஒளிகொடுக்கும் உடம்பு அலுப்புக்கும், மன அமைதிக்கும் இதுவும் இன்றியமையாதது. எழுத்தில் இது இல்லாமல் அல்லற்படுவோர் பலர்.
38. 39: முன்பனி, பின்பனி, கூதிருடன் இதுவும் சேரும். ஒரு வகை வாகன ஓட்டிக்கு இந்த ஆங்கிலப் பதமும் பயன்படுத்தப்படுகிறது.
40. 44: இலங்கையில் உள்ள மொழிகளில் ஒன்று. இது குழம்பியுள்ளது.
47. 48: மகிழ்ச்சிக்கு இப்படி ஒரு பதம் உண்டு.
52. 50: காலையில் பெரிய மிருகங்களைப் பிடிப்பதற்கு. பெரும் கிடங்குகளை "இதனை" வெட்டியே பொறியமைப்பர்.

- ஜெ.ஸ்ரீ. லோகா.

போட்டியிலக்கம்: 10 இன் விடைகள், பரிசில் பெறுவோர் விபரங்களுடனும், போட்டி இல: 11 இன் விடைகள், பரிசில் பெறுவோர் விபரங்களைத் தாங்கி இதழ் இல: 13 இல் வெளியிடப்படும்.

- ஆசிரியர்.



அண்ணன்: டேய் தம்பி! தெரிஞ்சிட்டுப் போ... அகதிகளுக்குக் காசு சேர்க்க வேணும் என்று தொண்டர் பேர் வெளிக்கிட்டிருக்கினமாம்... காசைக் கொண்டு தங்கட பொக்கற்றுக்கை போடுறதுக்காக்கும்....

தம்பி: நீ திருந்தவே மாட்டாய்! எப்பவும் வைக்கல் பட்டடை நாய் மாதிரி. நீ இதுவரை நீ எந்த நல்ல விசயத்திற்கு உதவி செய்தனி... உப்பிடிக் கதைச்சும் சொல்லியே.... ம்.

